


**14. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

- இந்தியா சீனா இடையே பரஸ்பர ஆலோசனைகளின் முக்கித்துவத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மீட்கப்பட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து சுபான்ஷு ஷுக்லா உட்பட 4 விண்வெளி வீரர்கள் இன்று Axiom 4 விண்கலம் மூலம் பூமிக்கு திரும்புகின்றனர்.
- தமிழக அரசு துறை திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைக்க நான்கு மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் செய்தி தொடர்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- பழம்பெரும் திரைப்பட நடிகை சரோஜாதேவி வயது மூப்பு காரணமாக பெங்களூருவில் இன்று காலமானர்.

**இனி விரிவான செய்திகள்**

*******

**ஜெய்சங்கர்**

இந்தியா சீனா இடையே பரஸ்பர கருத்து பரிமாற்றம் ஆலோசனைகளின் முக்கித்துவத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

சீன தலைநகர் பெய்ஜிங்கில் அந்நாட்டு துணை அதிபர் ஹான்செங்கை இன்று சந்தித்து பேசிய பின்னர் இருநாடுகளிடையே நட்புறவு இயல்பு நிலையில் தொடர்வதால் பரஸ்பர பயன்கள் இருப்பதை சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி, சீன அதிபர் ஸீ ஜின் பிங் இடையே கஸானில் சென்ற அக்டோபர் மாதம் நடைபெற்ற சந்திப்பிற்கு பின்னர் இருநாடுகளிடையே நட்புறவு தொடர்ந்து மேம்பட்டு வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

ஷாங்காய் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அமைச்சர் பேச்சுவார்த்தைகளும் ஆக்கப்பூர்வமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கைலாஷ் மானசரோவர் யாத்திரை தொடங்கப்பட்டதற்கு இந்தியாவில் அதிக வரவேற்பு இருப்பதாக கூறிய அவர் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெற்றிகரமான சீன தலைமைத்துவத்திற்கு இந்தியா ஆதரவு அளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனிடையே டாக்டர் ஜெய்சங்கர் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் செயலர் ஜென்ரல் **நுர்லனையும்** சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

நாளை ஷாங்காய் ஒத்துழைப்பு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

*******

**சர்பானந்த சோனோவால்**

கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை முன்னெடுத்து செல்ல அண்டை நாடுகளுடனான நமது நட்புறவு கொள்கை, வழிகோலுவதாக மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் இரண்டு நாள் பிம்ஸ்டெக் துறைமுகங்களின் மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர், இந்த மாநாட்டின் மூலம் பிராந்திய கடல்சார் இணைப்பும், ஒத்துழைப்பும் வளர்ச்சி அடைவதற்கான செயல் திட்டங்களுக்கு வழிகோலும் என்றார்.

நீர்வழி பொருளாதார மேம்பாட்டை முன்னெடுத்துச்செல்லும் வகையில், பசுமை துறைமுகங்கள் திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 10 ஆண்டுகளில், உள்நாட்டு துறைமுகங்கள் வாயிலாக, சரக்கு சேவை, 70 சதவிகிதம் அளவிற்கு அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார்.

நீலப்பொருளாதாரம், படைப்பாற்றல் திறன், நிலையான நட்புறவு உள்ளிட்டவற்றிற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இந்த இரண்டு நாள் பிம்ஸ்டெக் மாநாட்டில் விவாதங்கள் இடம்பெற உள்ளன.

*******

**முருகன்**

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மீட்கப்பட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.

கோவை மேட்டுப்பாளையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சமூக நீதி விடுதிகள் என்று அழைக்கப்படும் ஆதி திராவிடர் பழங்குடியின விடுதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்விடுதிகளை முதலமைச்சர் பார்வையிட்டு மாணாக்கருக்கு தேவையான வசதிகளை உருவாக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

மக்களின் அதிருப்தி காரணமாக வரும் தேர்தலில் திமுக அரசு தோல்வியை சந்திக்கும் என்று கூறினார்.

மத்திய அரசு தமிழகத்திற்கு தேவையான கல்வி நிதியை வழங்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அனைத்து மாநிலங்களிலும் தாய்மொழி கல்வியை ஊக்குவிக்கும் தேசிய கல்வி கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், ஆனால் அரசியல் காரணங்களுக்காக தமிழகத்தில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

தொடர்ந்து ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு சிபில் ஸ்கோர் அடிப்படையில் வேளாண் கடன் வழங்கப்படுவதாக கூறப்படுவது குறித்து மத்திய நிதியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றார்.

*******

**சுபான்ஷூ ஷுக்லா**

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து இந்திய வீரர் சுபான்ஷூ ஷுக்லா உட்பட 4 பேர் இன்று Axiom 4 விண்கலம் மூலம் பூமிக்கு புறப்படுகின்றனர்.

இந்திய நேரப்படி மாலை நான்கரை மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து Axiom 4 விண்கலம் Undocking மூலம் விடுவிக்கப்பட்ட பின்னர் பூமிக்கான பயணத்தை இந்த விண்வெளி வீரர்கள் தொடங்குவார்கள் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திராசிங் தெரிவித்துள்ளார்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு இக்குழுவினர் புவியை வந்தடைவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

*******

தமிழக அரசு

தமிழக அரசு துறை திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில், நான்கு செய்தி தொடர்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி டாக்டர் ஜே.ராதாகிருஷ்ணன் எரிசக்தி, மருத்துவம், போக்குவரத்து, கூட்டுறவு, கல்வித்துறை, மனிதவள மேலாண் துறை உள்ளிட்டவற்றையும்,

திரு.ககன்தீப்சிங் பேடி நகராட்சி நிர்வாகம், கால்நடை பராமரிப்பு, நீர்வளத்துறை, இயற்கை வளங்கள் துறைகள் குறித்தும்,

திரு.தீரஜ்குமார் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை துறை பற்றியும்,

திருமதி அமுதா வருவாய் பேரிடர், சமூகநலன், மகளிர் உரிமை, நெடுஞ்சாலை வீட்டுவசதி உள்ளிட்டவை தொடர்பாகவும் அறிவிப்புகளையும் தகவல்களையும் துல்லியமாக வழங்குவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*******

அமுதா

தமிழ்நாட்டில் அனைத்து நகர்புற ஊரக பகுதிகளில் அரசு துறைகளின் சேவைகள், திட்டங்களை அவர்களது இல்லங்களுக்கே சென்று வழங்கும் சிறப்பு திட்டம் நாளை தொடங்கப்படுவதாக அரசின் செய்தி தொடர்பாளர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.

நகர்புற பகுதிகளில் 3 ஆயிரத்து 768 முகாம்களும்,

ஊரக பகுதிகளில் 6 ஆயிரத்து 232 முகாம்களும் நடைபெறு உள்ளன.

மகளிர் உரிமை தொகை பெற விடுபட்டவர்கள் இதில் விண்ணப்பிக்கலாம் என்றார்.

முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

மருத்துவ சேவைகளை வழங்கும் மருத்துவ முகாம்களும் இதில் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி ஆகிய நான்கு நாட்கள் இம்முகாம்கள் நடைபெறும் என கூறினார்.

இதனிடையே இத்திட்டத்தை சிதம்பரத்தில் நாளை தொடங்கிவைப்பதற்காக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்றுமாலை அங்கு புறப்படுகிறார்.

*******

**ராஜா**

தமிழக அரசு ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 100 சதவிகித செயலாகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

ஜப்பான் ஒசாக்கோவில் உலக தொழில்நுட்ப கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கை துவக்கிவைத்து பேசிய அவர் மாநிலத்தின் கலாச்சார பெருமைகள் தொடங்கி அதி நவீன தொழில்நுட்ப தொழில்துறை குறித்து இதில் காட்சிபடுத்தப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

நமது மாநிலத்தின் சிறப்ப அம்சங்களான பறை தொடங்கி பரதம் நாட்டியம் அடிமுறை வரையிலனா கலை நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பை பெற்றதாக அவர் எடுத்துரைத்தார்.

இந்த ஜப்பான் பயணத்தின்போது புதிய துறைகளில் முதலீடுகளுக்கான வாய்ப்புகள் குறித்து விரிவாக ஆராய்ப்படும் என்றார்.

*******

**எடப்பாடி**

வரும் சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக அமோக வெற்றிபெற்று தனித்து ஆட்சி அமைக்கும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கூறியுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கடந்த நான்கரை ஆண்டுகளில் மக்கள் நல திட்டங்கள் எதையும் திமுக அரசு செயல்படுத்த வில்லை என குற்றம் சாட்டினார்.

*******

**சரோஜாதேவி**

பழம்பெரும் திரைப்பட நடிகை சரோஜாதேவி வயது மூப்பு காரணமாக பெங்களூருவில் இன்று காலமானர்.

அவருக்கு வயது 87.

50 ஆண்டுகால திரைப்பயணத்தில் தமிழ் தெலுங்கு கன்னடம் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள இவர், பிரபல திரைப்பட நடிகர்கள், எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன், ராமாராவ், நாகேஸ்வரராவ், ராஜ்குமார் திலீப்குமார் உள்ளிட்டோருடன் நடித்தவர்.

மகாகவி காளிதாஸ் கன்னட திரைபடத்தில் அறிமுகமான இவர் முதல் படத்திலேயே தேசிய விருதை வென்றவர்.

1958 ஆம் ஆண்டு நாடோடி மன்னன் தமிழ் திரைப்படத்தில் இவர் அறிமுகமானார்.

பத்மபூஷன், பத்மஸ்ரீ உள்ளிட்ட உயரிய விருதுகளை பெற்றுள்ள இவர், கன்னடத்து பைங்கிளி அபிநய சரஸ்வதி போன்ற அடைமொழியுடன் ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்பட்டார்.

கடந்த 2009ஆம் ஆண்டு தமிழில் ஆதவன் திரைப்படத்தில் சரோஜா தேவி நடத்திருந்தார்.

சரோஜா தேவி நடித்த திருடாதே படத்தை தயாரித்த நிறுவனத்தை சேர்ந்த ஏ.எல்.எஸ். ஜெயந்தி கண்ணப்பன் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

**வாய்ஸ்**

*******

**கலந்தாய்வு**

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் நடப்பாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு இன்று தொடங்கி அடுத்த மாதம் 19ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

*******

**நீதிமன்றம்**

தமிழகம் முழுவதும் பிடி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த அறிக்கையை வரும் 23ஆம் தேதி தாக்குதல் செய்யுமாறு தமிழக காவல்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பான தனிநபர் மனு இன்று விசாரணைக்கு வந்தபோது குறித்த காலத்திற்குள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*******

**இருவரி**

**விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலைகளில்** விதி மீறல்கள் குறித்து இன்று ஆய்வு நடைபெறும் நிலையில் அச்சத்தின் காரணமாக 200க்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகள் மூடப்பட்டுள்ளன.

ஆய்வின்போது விதிமீறல் இருந்தால் உரிமம் ரத்து செய்யப்படும் என அச்சத்தால் இந்நடவடிக்கை.

*******

**திருச்சி**

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் பேருந்து சேவை நாளை மறுநாள் தொடங்குவதால் போக்குவரத்தில் சில முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி.சரவணன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பயணிகளின் வசதிக்காக உணவகங்களும், தேனீர் கடைகள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பேருந்து நிலையத்தின் தூய்மையை பராமரிக்க 228 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதோடு, வழிகாட்டுவதற்கான தன்னார்வலர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் வசதிக்காக 3 பேட்டரி வாகனங்கள் தயாராக வைக்கப்பட்டிருப்பபதோடு மருத்துவ குழுவினரும் தயார்நிலையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

*******

**ரோப்கார்.**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் செல்லும் ரோப்கார் சேவை வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக நாளைமுதல் 31 நாட்களுக்கு நிறுத்தப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

*******

**கோவில்**

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

*******

**கிரிக்கெட்**

லண்டன் லார்ட்ஸில் இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இறுதி நாளான இன்று இந்தியா வெற்றிபெற மேலும் 135 ரன் எடுத்தாக வேண்டும்.

4ஆம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 58 ரன் எடுத்திருந்தது.

இரு அணிகளும் முதல் இன்னிங்ஸில் 387 ரன் எடுத்துள்ளன.

இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸ் ஸ்கோர் 192.

இன்றைய ஆட்டம் பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்கும்.

*******

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**